81
003

CANADA 150



# கனடா
# வாழ்த்தும் வளமும்

ஆக்கம்

கவிஞர். சபா. அருள்சுப்பிரமணியம் M.A.

150

2017

Digitized by the Internet Archive
in 2022 with funding from
University of Toronto Scarborough Library

https://archive.org/details/150canadavaazhth00unse

CANADA 150

# கனடா
# வாழ்த்தும் வளமும்

ஆக்கம்

கவிஞர். சபா. அருள்சுப்பிரமணியம் M.A.

THAMIL POONKA
3001 Markham Road # 21
Scarborough, ON M1X1L6
CANADA

647-378-3006
647-706-6123

2017

HOUSE OF COMMONS
CHAMBRE DES COMMUNES
CANADA
Gary Anandasangaree
Member of Parliament
Scarborough – Rouge Park

June 2017

## Greetings from Gary Anandasangaree

## Member of Parliament for Scarborough-Rouge Park, Toronto, Canada

I would like to extend my warmest greetings to Thamil Poonka in honour of your special Canada150 book release.

As we are on the heels of celebrating Canada 150, we reflect on our shared Canadian values. As we mark this milestone, we are encouraged to celebrate the rich diversity of our great nation. In particular, the young generation of Tamil-Canadians should be immensely proud of the contributions the Tamil Community has made to Canada.

I congratulate Thamil Poonka for highlighting our collective Canadian success stories and empowering our youth.

CANADA 150

Yours very truly,

Gary Anandasangaree
Member of Parliament
*Scarborough-Rouge Park*

*Ottawa*
Room 1110, The Valour Building, Ottawa, Ontario K1A 0A6
Tel.: 613-992-1351 Fax: 613-992-1373
Gary.Anand@parl.gc.ca

*Constituency Office*
3600 Ellesmere Road -Unit 3, Scarborough, Ontario, M1C 4Y8
Tel.: 416-283-1414
Gary.Anandasangaree.C1@parl.gc.ca

TORONTO

Councillor Neethan Shan

Ward 42, Scarborough-Rouge River

City Hall
100 Queen Street West, Suite B23
Toronto, Ontario M5H 2N2

Tel: 416-392-4078
Fax: 416-696-4159
Email: Councillor_Shan@toronto.ca

June 21, 2017

Dear Esteemed Readers:

I am pleased to offer my warmest greetings to everyone reading this Special Edition Book in honour of Canada 150.

I want to congratulate Thamil Poonka, Tamil School for taking this initiative to mark the 150th birthday of our great country, Canada. I commend the School for recognizing all that Canada has to offer and joining in on the nationwide celebrations.

I also applaud Thamil Poonka for being a community centre and a not-for-profit organization that is actively engaged within the Tamil Canadian community. On behalf of the City of Toronto, please accept my wishes for a truly enjoyable read.

Sincerely,

Neethan Shan
Toronto City Councillor - Ward 42

311

## Greeting for Canada 150

In anticipation of the 150th anniversary of Canada, it is with great pleasure that I announce the release of a book by Thamil Poonka filled with songs praising the greatness of Canada. Canada is at the forefront in championing multiculturalism and an example to the world in this and any other regard. It's a country that welcomes and provides abundantly for newcomers. Not only has that, among many other amazing things, Canada also given great importance to educating its next generation and to caring for its elderly population. As Canada celebrates its 150 year anniversary, we must all celebrate this wonderful country and show our pride in being part of it.

As Thamil Poonka wishes and praises Canada for its greatness, we urge everyone else to join us and celebrate this great country with us.

Regards,

*Yoga Arulsubramaniam*
Principal
**Thamil Poonka School**

என்னுரை

நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு. (திருக்குறள்:739)

பல்லாயிரம் ஆண்டுகட்குமுன் தமிழர் கூறிய இலக்கணப்படி அமைந்த ஒரு நாட்டில் வாழும் வாய்ப்பைப் பெற்றவர்கள் என்றவகையில் அதை வாழ்த்தும் கடப்பாடும் கொண்டவர்களாக உள்ளோம். பூர்வகுடிகளுடன் இணைந்து கனேடிய குடிவர வாளர்களும் சேரந்து கட்டியெழுப்பிய கனடா என்றென்றும் தன்னெழிலும், தன்னியல்பும் மாறாமல் இருக்கவேண்டுமென்று மனதார வாழ்த்துவோம். இந்த எண்ணத்துடன் எழுந்தவையே இப்பாடல்கள். வாழ்த்தும் என்னோடு தாங்களும் கைகோர்க்க இப்படைப்பு உதவுமென நம்புகிறேன். நன்றி.

சபா. அருள்சுப்பிரமணியம்.
பாடலாசிரியர்.

# விழுதாய் நாமும் மாறிடுவோம்!!

நூற்றி ஐம்பது அகவையிலே
நுழையும் கனடா தேசத்தைப்
போற்றிப் பணிந்து வணங்கிடுவோம்!
பொலிவுற வேண்டி வாழ்த்திடுவோம்!!

சொந்த மண்ணில் அடிபட்டுத்
தூர தேசம் கதியென்று
வந்த பல்லின மக்களையும்
வரவேற் றுதவிய திக்கனடா!

நிலவளம் நிறைந்த கனடாவை!
நீர்வளம் மலிந்த கனடாவை!
உலகிற் சிறந்த நாடாக
உயர்த்தக் கூடி உழைத்திடுவோம்!!

பல்லினம் கூடிக் கைகோர்த்துப்
பண்பாய்ப் பழகும் கனடாவில்
நல்லிணக் கத்தை வெளிப்படுத்தி
நாளும் சேர்ந்து பழகிடுவோம்!

ஒருவரை ஒருவர் மதித்திடுவோம்!
ஒற்றுமை யாக இருந்திடுவோம்!!
பெருவளம் கொண்ட கனடாவின்
பெயரது விளங்கப் பணிசெய்வோம்!

ஒளிந்து கிடக்கும் திறமைகளை
ஒன்றாய்த் திரட்டி மூச்சோடு
வெளியே கொணர்ந்து கனடாவின்
விழுதாய் நாமும் மாறிடுவோம்!!

# வாழ்த்துகிறோம்!

காலைப் பதித்து நாம்வாழக்
    கைகொடுத் திட்ட கனடாவே!
யூலை முதலாம் நாளிதிலே
    நூறு வாழ்த்துகள் கூறுகிறோம்!!

மனித நேயம் காத்தொன்றாய்
    மகிழ்ந்து வாழ வழிகாட்டி
கனிவுடன் எம்மை அணைக்கின்ற
    கனடியத் தாயே வாழ்த்துகிறோம்!

தனித்துவம் பேணிச் செயற்படுவோம்!
    சமத்துவம் காத்து மகிழ்ந்திடுவோம்!!
தனித்திறன் காட்டி உயர்ந்திடுவோம்!
    தன்மா னத்துடன் வாழ்ந்திடுவோம்!!

வாழ்த்துகள் கூறி வணங்குகிறோம்!
    மனநிறை வோடு போற்றுகிறோம்!!
வாழ்வளித் தெம்மைக் காத்துவரும்
    வளம்மலி கனடா வாழியவே!!

பிறந்த நாளில் வாழ்கவெனப்
    பிள்ளைகள் நாங்கள் வாழ்த்துகிறோம்!
சிறந்த வாழ்வை தந்தாய்நீ!
    செல்வச் செழிப்புடன் வாழியநீ!!

கனடியக் கொடிமுன் தலைசாய்ப்போம்!
    கண்ணிய மாயதைப் போற்றிடுவோம்!
அனைவரும் எழுந்து நின்றதற்கு
    அன்பாய் வணக்கம் சொல்லிடுவோம்!!

# வாழியவே!

இரண்டாம் பெரிய நாடென்று
எடுத்துக் கூறும் அளவிற்கு
திரண்ட செல்வச் செழிப்போடு
திகழும் நாடு இக்கனடா

பனியும் குளிரும் ஆண்டெல்லாம்
பரந்து காணப் பட்டாலும்
மனிதர் நாடும் நாடாக
மலரும் கனடா வாழியவே!

வடக்கே வடமுனை ஓரெல்லை
கிழக்கே அட்லாண்ட் கடலெல்லை
தெற்கே அமெரிக் காவெல்லை
மேற்கே பசுபிக் மறுஎல்லை.

காட்டு வளங்கள் இங்குண்டு
கனிமப் படிவும் இங்குண்டு
அல்பேட் டாவில் எண்ணெய்வளம்
அரியநற் செல்வ மாயுளது

தங்கம், நிலக்கரி யுரேனியம்
தரையிற் காணும் படிமத்துடன்
எங்கும் உள்ள நீர்ப்பரப்பில்
இருக்கும் மீன்வளம் ஏராளம்.

கோதுமை போன்ற தானியங்கள்
கொழுத்த பல்லினக் கால்நடைகள்
யாதும் மலிந்து காண்கின்ற
நாடாம் கனடா வாழியவே!

# கூட்டரசாக....

பூர்வ குடியினர் தம்மோடு
புதிய குடிவர வாளர்களும்
ஆர்வ மாக ஒன்றிணைந்து
ஆக்கிய கனடா வாழியவே!

கூட்டர சாகக் கனடாவைக்
கொண்டு வந்து இன்றோடு
நூற்றி ஐம்பது ஆண்டாச்சு
ஏற்றிச் சேர்ந்து போற்றிடுவோம்!

பத்து மாகா ணங்களுடன்
பரந்த எல்லை மாநிலங்கள்
மொத்தம் மூன்றும் சேர்ந்ததுதான்
முழுக்கன டாவின் தோற்றம்காண்!

மூன்று நிலையில் ஆட்சிதனை
முக்கியப் படுத்தி இருந்தாலும்
ஈண்டு நடுவண் அரசொன்றே
எடுக்கும் முக்கிய முடிவெல்லாம்

மக்க ளாட்சிக் கூட்டரசால்
மகிமை பெறுவது நம்கனடா
பக்கம் சாராக் கொள்கையினால்
பாரை ஈர்ப்பதும் நம்கனடா

சுதந்திர கனேடிய சாசனத்தில்
சொல்லிய உரிமைகள் அனைத்தினையும்
சுதந்திர மாக அனுபவிக்க
துணைசெய் கிறது நம்கனடா!

# கனடாவே!

வெள்ளை சிவப்புக் கொடியின்கீழ் - நிழல்
விரிக்கும் மேப்பிள் இலையின்கீழ்
உள்ளம் மகிழ்ந்து எல்லோரும் - இங்கு
ஒற்றுமை யாக வாழுகிறோம்!

அழகினிற் சிறந்தநம் கனடாவே! – என்றும்
அனைவரும் விரும்பிடும் கனடாவே!!
வளம்பல கொண்டநம் கனடாவே! – நல்ல
வாய்ப்புகள் நிறைந்தநம் கனடாவே!!

பல்லினம் வாழ்ந்திடும் கனடாவே! – எங்கும்
பன்மொழி பேசிடும் கனடாவே!!
பல்பண் பாடு காக்கின்ற - இனம்
பலதையும் ஊக்கும் கனடாவே!

அகதிக ளாக வருவோரை – என்றும்
ஆதரித் துதவிடும் கனடாவே!
புகலிடம் வழங்கிய கனடாவே! – நீ
புகழ்பெற உழைப்போம் கனடாவே!!

பற்பபல இனத்தவர் கூடியொன்றாய் - என்றும்
பண்புடன் பழகிடும் கனடாவின்
அற்புத நிகழ்வில் கைகோர்த்து
அனைவரும் வாழ்த்துப் பாடுகிறோம்!!

எங்கள் பங்கை நாமுணர்வோம் - அதை
இன்றே வழங்க முன்வருவோம்!
சங்கொலி எழுப்பிக் கனடாவே - உன்
சாதனை யாவும் பாடிடுவோம்!!

# எழில்நிறை கனடா...

வடஅமெ ரிக்கா வரலாற்றில்
வாய்த்த சிறந்த அருவியென
இடம்பிடித் துள்ள நயகராவே
எல்லையில் உள்ள பேரருவி

உலகில் விண்தொடும் உயரத்தில்
உள்ள கோபுர வரிசையிலே
சீ.என். கோபுரம் அமைந்துளதால்
சிறப்பைக் கனடா பெறுகிறது.

பத்து முன்னணி விளையாட்டில்
பாலர் முதியோர் ஈடுபட்டு
எத்தனை பெருமை சேர்க்கின்றார்
எங்கள் கனடா மண்ணுக்கு

கல்வி மருத்துவம் வணிகத்தில்
கணிச மான பகுதியினர்
நல்ல பங்கு ஆற்றுகிறார்
நாட்டை உயர்த்த உதவுகிறார்

அறிவியல் பொறியியல் மேம்பட்டு
அனைத்துத் துறையிலும் மேன்மைபெற
நெறியது காட்டும் கழகங்கள்
நிறைய உண்டு கனடாவில்

பல்லினத் தவரும் படிப்பதற்கு
பலநூல் கொண்ட நூலகங்கள்
நல்ல முறையில் அமைத்திங்கே
நாங்கள் பயன்பெறச் செய்துள்ளார்.

# கனடாப்பனி

தூற்றல் போடும் பனியழகு!
துகளாய் வீழும் பனியழகு!!
காற்றில் மிதக்கும் பனியழகு!
கரைந்து உருகும் பனியழகு!!

விண்ணிற் பறக்கும் பனியழகு
வீதியை மூடும் பனியழகு!
மண்ணை மூடும் பனியழகு
மலைபோற் குவியும் பனியழகு!

பாறையை மூடிய பனியழகு!
பளபளத் தொளிரும் பனியழகு!!
கூரையில் விழுந்த பனியழகு!
கோடியிற் குவிந்த பனியழகு!!

கல்லாய் உறைந்த பனியழகு!
காலைப் புதைக்கும் பனியழகு!!
சில்லெனக் குளிரும் பனியழகு!
சேர்ந்து குவிந்த பனியழகு!!

பஞ்சாய்ப் பறக்கும் பனியழகு!
பாதையிற் கிடக்கும் பனியழகு!!
குஞ்சம் போன்று ஆங்காங்கே!
கூராய்த் தொங்கும் பனியழகு!!

உப்புக் குருகும் பனியழகு
உறைந்து இறுகும் பனியழகு!
வெப்பம் கண்டு தடுமாறி
விரைந்து ஓடும் பனியழகு!!

# தாய்மண் காப்பது மெங்கடமை

இருமொழி பேசும் இலங்கையிலே
எங்கள் தாயகம் தமிழீழம்
பெருவளம் நிறைந்த நம்மண்ணைப்
பேணிக் காப்பதும் எம்கடமை.

திருமலை மன்னார் மட்டுநகர்
சேர்ந்து இருக்கும் யாழ்ப்பாணம்
பெருவளம் கொண்ட வன்னியுடன்
பெருமை சேர்ப்பது தமிழீழம்!

தாய்மண் காப்பது எம்கடமை
தமிழை வளர்ப்பது மெங்கடமை
ஓய்வில் லாமல் உழைத்திடுவோம்
உயர்ந்த தாய்மண் காத்திடுவோம்

பொறியியல் மருத்துவம் விஞ்ஞானம்
புவியியல் கணிதம் விளையாட்டு
அறிவியல் இலக்கியம் சட்டமென்று
அனைத்துக் கலையிலும் தேர்ந்திடுவோம்!

கமத்தொழில் கைத்தொழில் நெசவோடு
கடற்றொழில் கணினி எனக்கற்று
எமதூர் களையும் வளம்படுத்த
இயன்ற வரைநாம் கைகொடுப்போம்!

மாந்த நேயம் காக்கின்ற
மக்கள் வாழும் கனடாபோல்
வாழ்ந்த ஈழ தேசமதை
மாற்ற நாங்கள் துணைசெய்வோம்!

கவிஞர். சபா. அருள்சுப்பிரமணியம் M.A.

CANADA 150

1867 - 2017 CANADA 150 YEARS

உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் ★ UTMOST FOR THE HIGHEST

அ ஆ

# தமிழ்ப்பூங்கா

Since 1997 Thamil Poonka

- *Tamil Class*
- *Teachers' Training*
- *Tamil Reading Club*
- *Youth Leadership Session*
- *Career Planning*
- *Counseling*
- *Yoga Class & Yoga Therapy*
- *Art & Craft*
- *Kids Music Class*
- *Home Work Class*
- *Spoken English*
- *Referral to Settlement Services*

வெளியீடு:

**THAMIL POONKA**

3001 Markham Road #21,
Scarborough, ON. M1X 1L6
CANADA.

647-378-3006, 647-706-6123

www.thamilpoonka.org
thamilpoonka@gmail.com

Graphic Design: DIGITAL EFFECTS, 647-290-7211